







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 46 12.11.2025




## ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

படித்து

பின்பற்ற வேண்டிய

முத்துக்கள்

உபதேசங்கள்

# முத்துக்கள்

நித்யமான ஆத்மாக்களுக்கு நாசம் என்பதில்லை;
சரீரத்தை விட்டுப் பிரிதல் மாத்திரமே உண்டு.

*******************************************************

“வ்யவஸாயம் ஆத்மநிர்ணயம்.”

அதாவது ஆத்மா தேகத்தைக்காட்டிலும் வேறானது. அணுவானது. ஜ்ஞானானந்த மயமானது, பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஶேஷமானது என்ற நிர்ணயம். மோக்ஷத்தை விரும்புகிறவனுக்கு இந்த நிர்ணயம் நிச்சயமாக இருக்கும்.

*******************************************************

## ராமாயணத்திலிருந்து

शुश्रूषामेव कुर्वीत भर्तुः प्रियहिते रता।
एष धर्मः पुरा दृष्टो लोके वेदे श्रुतः स्मृतः ।।
2.24.27

சுஸ்ரூஷாமேவ குர்வீத பர்துஃப்ரியஹிதே ரதா
ஏஷ தர்மஃ புரா த்ருஷ்டோ லோகே வேதே ஸ்ருதஃ ஸ்ம்ருத..|
12.24.2711

(பெண்கள்) கணவருக்கு இஷ்டம் அனுகூலமானவற்றில் ஈடுபட்டு எப்போதும் பணிவிடை செய்ய வேண்டும். இந்த தர்மம்தான் பண்டைய காலத்திலிருந்து உலக வழக்கமாக இருந்து வருகிறது: வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் பாராட்டப் பெற்றுள்ளது.

**********************************************************

1. லட்சுமிபதியின் பாதங்களைப் பற்றிக் கொள்ளுங்கள்.
2. பாகவதர்கள் எல்லா நேரங்களிலும் மதிக்கப்பட வேண்டும், சேவை செய்யப்பட வேண்டும்.
3. மோக்ஷம் ஒரு சிறந்த ஆனந்தம்.
4. சரணாகதியை சீக்கிரமாகவே தேடுங்கள்.
5. அஷ்டாக்ஷர மந்திரம், த்வய மந்திரம் மற்றும் சரணாகதி மந்திரங்களை எந்த வகையிலும் ஜபிக்கத் தவறவிடக்கூடாது.

# ஸ்ரீமத் பாகவதபுராணத்தின் நன்மைகள்

**1.நல்லறிவு பெற:- 'ஜந்மாத்யஸ்ய யத:' (ஸ்ரீமத் பாகவதம் ஸ்க. 1, அத். 1, சுலோ.1)**

**2. இடையூறுகள் நீங்கி நற்பயன் பெறவும், நோயற்ற வாழ்வும் செல்வமும் பெற:-'நாராயணகவசம்' (ஸ்ரீமத் பாகவதம் ஸ்க. 6, அத். 8)**

**3.மனவிருப்பம் நிறைவு பெற:- 'பும்ஸுவந விரதம்' (ஸ்ரீமத் பாகவதம் ஸ்க. 6, அத். 19)**

**4. கடன் தொல்லை நீங்க, பகை நீங்க, தரித்திரம் விலக:- 'கஜேந்திரன் (ஸ்ரீமத் பாகவதம் ஸ்க. 8, அத். 3) துதி'**

**5. நன்மக்கள் பெற:- 'பயோவிரதம்' (ஸ்ரீமத் பாகவதம் ஸ்க. 8, அத். 16)**

**6. முக்தி பெறவும் அபிசாரங்கள் (செய்வினை) நீங்கவும்:- 'ஸப்தாஹ விதி' (ஏழு நாட்கள் முறை)ப்படி பாராயணம் செய்தல். இப்படிப் பலப்பல.**

**ஆனால், வேண்டுவது அறிபவனும், வேண்டத் தருபவனும் அப்பரமனே! ஆகையால், அவரை நினைத்துக் காதலாகிக் கசிந்து பாராயணம் செய்ய, அனைத்தும் கிட்டுமே! போதாதா?**

****************************************

***சிலந்திபூச்சி தன்னிடமிருந்தே நூலை உண்டாக்கி வலை செய்கின்றது. அதைத் தானே காக்கின்றது. அதை தன்னுள்ளேயே அடக்கிக்கொள்ளுகின்றது. இது ‘பிரம்மமும் ஜகத்காரணம், ஸ்திதிகர்த்தா, ஸம் ஹார கர்த்தாவாக இருந்து ஸகலத்தைத் தன்னிடமே ஸதா இருக்கும்படி செய்கின்றது' என்ற அரிய விஷயத்தைத் தெரிவித்தது.***

# <u>ஶ்ரீமத் பாகவதத்தின் முக்கியத்துவம்</u>

**1. ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு ஸ்லோகத்தையாவது படியுங்கள்.**

**2.இது முடியாவிட்டால், குறைந்தது பாதி ஸ்லோகத்தையாவது படியுங்கள்.**

**3.முடியாவிட்டால், குறைந்தது கால் ஸ்லோகத்தையாவது படியுங்கள்.**

**4. இவற்றில் ஏதேனும் ஒன்றை நீங்கள் உட்கார்ந்து படிக்க முடியாவிட்டால், யாராவது ஒரு பாகவத ஸ்லோகத்தை ஓதுவதைக் கேளுங்கள்.**

**1000 பசுக்களை தானம் செய்ததன் பலனைப் பெறுவீர்கள்.**

**மூலம்: ஸ்கந்த புராணம்**

ஶ்லோகார்த4ம் ஶ்லோகபாத3ம் வா நித்யம் பா4க3வதோத்3ப4வம் ।
படே2த் ஶ்ருணுயாத்3 யஸ்து கோ3 ஸஹஸ்ரப2லம் லபே4த் ॥

***********************************************

*பகவானைக் கெட்ட எண்ணத்தோடு எடுத்துப் பால் கொடுத்த போதிலும் அவரது பாதார விந்தங் களால் உதைக்கப்பெற்று இறக்கும்படி நேரிட்டதால் பூதனை புனிதையானாள் என்றால், பகவானை மிகுந்த அன்புடன் பால் கொடுத்து வளர்த்த யசோதை முதலியோருக்கும், அவருக்குப் பால் கொடுத்த கோபாலர் களுக்கும் பசுக்களுக்கும் பரமபதம் கிடைத்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? ஆதலால் பகவான் கெட்டவர்களையும் நிர்க்கதியாக விட்டுவிடுவதில்லை. அவர் நிஜபக்தி செய்தவர்களுக்கு எளிதில் பரமபதம் அளிக்கும் தன்மை வாய்ந்தவர் என்று அறிந்து நாமும் அவர் கிருபையை அடைய யோக்கியர்களாக முயல வேண்டும்.*